தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1975 மார்ச் 27.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Selection Grade Posts

* 190 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Secretarial Assistants have not yet been promoted to Selection Grade from 1st January 1971 on the basis of percentage; and

(*b*) if so, whether the Government will issue necessary orders for the same?

தேர்வுத்தர பதவிகள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அலுவலகவியல் உதவியாளர்களுக்கு 1—1—1971 முதற்கொண்டு சதவீத அடிப்படையில் தேர்வுத்தர பதவி உயர்வு அளிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குத் தேவையான ஆணைகளை அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ்: சதவிகித அடிப்படையில் தேர்வு நிலை 1—1—1971லிருந்து வழங்கப்படுகிறது. 10 ஆண்டு அடிப்படையில் 1—4—1974லிருந்து வழங்கப்படுகிறது. இந்த அடிப்படையில் அவர்களுக்கு அறிவிக்கப்படும்போது வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பி.டி. ஆசிரியர்களுக்கும், முதல் நிலைத் தமிழாசிரியர்களுக்கும், சிறப்பு ஆசிரியர்களுக்கும் 10 ஆண்டுக்கால அடிப்படையில் தேர்வு நிலை வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தாலும், சிறப்பு ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலும் விளக்கம் கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. என்ஜினியரிங் இன்ஸ்ட்ரக்டர்ஸ், அக்ரிகல்சுரல் இன்ஸ்ட்ரக்டர்ஸ், செக்ரடேரியல் அஸிஸ்டெண்ட்ஸ் என்று இருக்கும்போது, ரூ. 300 சம்பளம் வாங்குகிறவர்களுக்கு இந்த கிரேட் கொடுக்கலாமென்றும், ஆனால் ரூ. 375 வாங்கி ரூ. 650க்கே போகிறவர்களுக்குக் கொடுப்பது சரியாகாது என்றும் நிதித் துறையினர் மறுப்பு தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விளக்கங்கள் பெற்றதற்குப் பிறகு, ரூ. 300 அடிப்படை வாங்குகிறவர்களுக்கும், பி. டி. ஆசிரியர் வாங்குகிற அடிப்படையிலே கிடைத்துவிடும். தற்போது நிதித்துறையைக் கலந்து கொண்டு நாம் முடிவு செய்ய வேண்டியிருக்கிற காரணத்தால்தான், காலத் தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. விரைவிலே அதுபற்றி அறிக்கை விடுவோம்.

* 191 *Q*.—THIRU P. R. THOMAS (on behalf of Thiru K. S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the Government granted Selection Grade Scale of Pay to all those who are in the pay scale of Rs. 300–15–420–20–500 and who have completed 10 years of service; and

(*b*) if so, the reason for the denial of Selection Grade to erswhile Grade-I Language Teachers, Secretarial Assistants, Agricultural Instructors etc., who also draw the same scale of pay ?

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எம். கணபதி சார்பில்); மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ரூ. 300—15—420—20—500 சம்பள வீதத்தில் பணியாற்றி 10 ஆண்டுகள் பணி முடித்த அனைவருக்கும் தேர்வுத்தர சம்பள வீதத்தை அரசு வழங்கியுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இதே சம்பள வீதத்தைப் பெறுகிற முன்னாள் முதல்நிலை மொழி ஆசிரியர்கள், அலுவலகவியல் உதவியாளர்கள், வேளாண்மைப்பள்ளி ஆசிரியர்கள் போன்றோருக்கு தேர்வுத்தரம் அளிக்க மறுப்பதற்கான காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) அரசாணை எண். 519, கல்வி, நாள் 31—3—1973-ல் பி.டி. ஆசிரியர்களுக்கும், முதல்நிலைத் தமிழாசிரியர்களுக்கும், சிறப்புப் பிரிவு ஆசிரியர்களுக்கும்,